**செ.வெ. எண்: 114** **நாள் : 03.02.2011.**

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மீன்வளத்துறையில் மீன்வளர்ப்போர் மற்றும் துறை தொழில்நுட்ப அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் மீன் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கென பிற மாநிலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் மீன்வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்து மீன்வளத்துறை அலுவலர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களும் அறிந்து கொள்ள தமிழக அரசு தற்போது வழிவகை செய்துள்ளது. இதன்படி மத்திய அரசின் வேளாண் துறை அமைச்சகத்தின் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 409 மீன் வளர்ப்போருக்கும், 108 தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் ஆந்திர பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்காளம், கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் உள்ள மத்திய, மாநில மீன்வள ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தனியாரால் நிர்வகிக்கப்படும் மீன்பண்ணைகளுக்கும் அழைத்துச் சென்று பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட பயிற்சியின் முதல் அணி நிறைவு நாள் மற்றும் இரண்டாவது அணி துவக்க நாள் நிகழ்ச்சி சென்னை அசோக் நகரில் உள்ள மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையத்தில் 2–2–2011 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு, மீன்வளத்துறை ஆணையர் திரு. கே. செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு இரண்டாவது அணி பயிற்சியினை துவக்கி வைத்து உரையாற்றினார். மேலும், பயிற்சி நிறைவு செய்த முதல் அணியின் 15 மீன்வளர்ப்போருக்கும் 8 தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் சான்றிதழ் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மீன்வளத்துறை இணை இயக்குநர் (ஆராய்ச்சி), தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணைய தனி அலுவலர், மீன்துறை பணியாளர் பயிற்சி நிலைய முதல்வர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மீன்துறை ஆணையருக்காக

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**